செ.வெ.எண்: 76 நாள்: 30.03.17

# பத்திரிக்கை செய்தி

தொழிலாளர் துறையில் புதியதாக நியமிக்கப்பட உள்ள ஈப்பு ஓட்டுநர்களுக்கு எழுத்துத் தேர்வு எதிர்வரும் 09.04.2017 அன்று நடைபெறவுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் தொழிலாளர் துறையில் காலியாக உள்ள ஒரு ஈப்பு ஓட்டுநர் பணியிடத்திற்கு, ஒரு ஈப்பு ஓட்டுநர் பணியமர்த்தப்படவுள்ளது.

ஈப்பு ஓட்டுநர் பணியில் சேர்வதற்கு கடந்த 12.10.2015 தேதியில், தினசரி நாளிதழ்களில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 06.11.2015 நாள் விண்ணப்பிக்க கடைசி நாளாக அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஈப்பு ஓட்டுநர் பணியில் தற்காலிக அடிப்படையில் பணிபுரிவதற்கான விண்ணப்பங்கள் சென்னை தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தால் பெறப்பட்டது.

மேலும், இப்பணியில் பணிபுரிவதற்கு தகுதியான, திறமையான, ஈப்பு ஓட்டுநர்கள் தெரிவு செய்வதற்கான, எழுத்துத்தேர்வு எதிர்வரும் 09.04.2017 அன்று அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருப்பாதிரிப்புலியூர், கடலூர் –2 ல் (பத்தரப்பதிவுத் துறை அலுவலகம் அருகில்) நடைபெறவுள்ளது. எழுத்துத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்படுவர்கள் ஓட்டுநர் தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு மூலம் பணியமர்த்தப்படுவார்கள். எழுத்துத் தேர்வில் கலந்து கொள்ள, தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நுழைவுச்சீட்டு, தபால் மூலம் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. நுழைவுச்சீட்டு கிடைக்கப்பெறாதவர்கள், எண்.60, சுப்புராயலு நகர், 2 –வது குறுக்குத் தெரு, கடலூர்–2 என்ற முகவரியில் உள்ள தொழிலாளர் ஆய்வாளர் (Inspector of Labour) அலுவலகத்தில் அலுவலகப்பணி நாட்களில் நேரில் சென்று பெற்றுச் செல்லுமாறு விண்ணப்பதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.பொ.ராஜேஷ், இ.ஆ.ப. அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

(ஒம்) XXXX
மாவட்ட ஆட்சியர்,
கடலூர்

உண்மை நகல்

(கையொப்பம்) 30/03/17
தொழிலாளர் ஆய்வாளர்,
கடலூர்.

வெளியீடு:- செ.ம.தொ.அ. கடலூர்.